"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

REGISTRAR OF BOOKS
REGISTERED
10 JUN 1910
MADRAS

பூலோக வியாஸன்.

மாதாந்தரப் பிரசுரம்.

தொகுதி 6] சென்னை, 1909-ஞு ஜூன்மீ [பகுதி 6.

ராஸிலஸ்.

122-ம் பக்கத்தொடர்ச்சி.

பின்பு ராஜகுமாரன் "நீர் மொழிந்தனவெல்லாம் மெத்தவும் விரும்பத்தகும். கேவலம் மனோ திர்ஷடியாய்க் காணும் காற்றொடுக்கமான ஆகாயத்தில் உயரப்பறந்து உச்சுவாச நிச்சுவாசம் செய்து பிழைக்க வல்லவன் இல்லை. உயர்ந்த மலைச்சிகரங்களில் மனுஷர் உச்சுவாச நிச்சுவாசம்செய்வது கஷ்டமென்று சொல்லக் கேள்வி. உயரப்போகப்போக, காற்று உரம் குன்றி நுண்ணிதாகு மெனினும், மிக உயர்ந்த செங்குத்தான மலைச்சிகரம் சேர்ந்த ஒருவன், அடி சறுக்கினால் கீழே தரையில் விழுவதற்கு ஐயம் இல்லை. ஆகவே ஜீவனுக்குத் தாயகமான வாயு எவ்வளவெனினும் உள்ள உயர்ந்த ஸ்தானத்தில் நிலைதவறினால் விழுந்துவிடும் அபாயம் இருக்கின்றது போலும் என ஆக்ஷேபித்தான்.

அதற்கு யந்திரிகன், பிறக்கும் ஆக்ஷேபம் அனைத்திற்கும் முந்தவே சமாதானம் சொல்லத் தலைப்படில், எக்காலத்திலும்

எவ்வகை முயற்சியும் சாயாது. என் சிந்தையில் பிறந்த உபாயத்தை அடுத்துக் கருமம் முடிக்க எனக்கு அனுகூலியாயிருப்பீரானால், வந்த விக்கினம் வரட்டுமென்று மனம் துணிந்து நானே முந்தப்பறப்பேன். ஆகாயத்தில் பறக்கும் திறமுள்ள பக்ஷிஜாலம் அனைத்தின் உறுப்பமைதியையும் தீரத் தெளியச்சிந்தித்தேன். சிந்தித்த அளவில், வௌவால் இறகின் மடக்குத்தொடர் மனுஷர் அங்கத்தின் இயற்கைக்கு எளிதில் இசையுமென்று தோன்றுகிறது. இம்மாதிரியை அனுசரித்து, கருதிய கருமத்தை நாளைக்கையிடுவேன் இன்னும் ஒரு வருஷம் செல்லுமுன் ஆகாயத்தில் உயரப்பறக்க நினைத்திருக்கிறேன். அங்கே மனுஷர் மாற்சரியம் செல்லாது அவர்கள் என்னைத் தொடர்ந்து அங்கே வருவது அசாத்தியம். இந்த உபாயத்தைத் தாம் எவருக்கும் வெளியிடலாகாது: நம்மிருவருக்கன்றிப் பிறருக்குப் பறக்கச் சிறகு அமைத்துக் கொடுக்க என்னைக் கேட்கவுமொண்ணாது. இவ்விரு சங்கேதமும் தவறாது கைக்கொள்வீரானால், சொற்படி செய்யத் தொடங்குவேன் என்றான்.

ராஸிலஸ்:-அழுக்கா றவாவெகுளி யின்னாச் சொன்னான்கு மிழுக்கா வியன்ற தறம்" எனும் நீதியை மறந்தீரா? பெறுவதற்கு அரிய இப்பெரும்பயனைப் பிறர் அடையாவண்ணம் உமது மனதில் மாற்சரியம் உண்டாவதேன் செய்தொழில் அனைத்தையும் சர்வ ஜனோபகாரார்த்தம் செய்வது கடன். எவன் ஒருவனுக்கும் பிறரால் விளையும் பயன் மிகுதி ஆகவே அவனவன் பெற்ற உபகாரத்திற்குப் பிரதியுபகாரம் செய்வது தர்மமே.

யாந்திரிகன் மனுஷர் எல்லாரும் நல்லவர்களானால் நான் பறக்கும் வித்தையை மிகவும் மனமகிழ்ந்து யாவருக்கும் கற்பிப்பேன் எல்லாரும் நல்லோரல்லவே. தப்பிப் பிழைக்கக் கருதி உயரப் பறக்கும் சர்ஜனரைத் துர்ஜனர் நேர்ந்தபடி தாவடிபோய்த் தாக்கத் தலைப்படில் அப்புறம் அவர்களுக்கு மற்றென்ன கதி உண்டு மேகமண்டலத்தை ஊடறுத்துச் செல்லும் சேனா சமுத்திரத்திற்குத் தப்பிப் பிழைக்க ஆகாயத்தில் மதிலரணும் இல்லை மலையரணும் இல்லை கடலரணும் இல்லையே. உத்தர தேசவாசிகளாகிய மிலேச்சர் அத்தனை பெயரும் பறந்துவந்து ஆகாயத்தில் வட்டமிட்டுச் சமயம்பார்த்து செழுநில வளம் மலிந்து சிறந்த

தேசத்து ராஜமாநகரத்தைப் பருந்து கோழிக்குஞ்சை விழுந்து அடித்துக் கொண்டுபோவதுபோலச் சடிதியில் மேல்விழுந்து அமர்த்திக் கட்டிக்கொள்வார்களே. அந்தக் கடுங்கொடிய ஜாதியாரோடு எதிர்க்கவல்லவர் ஆர்? தென்சமுத்திரக்கரை அடுத்த தேசத்தில் ஈக்கூட்டம்போல மொய்த்திருக்கும் பிராணிகளாகிய கண்டகர்கள் ராஜபுதல்வர்க்குப் புகலிடமும் ஆனந்தத்திற்கு உறைவிடமும் ஆகும் இச்செழும பள்ளத்தாக்கை முதலாக அசதியில் பறந்து வந்து இறங்கி அபகரித்துப பாழாக்கினும்பாழாக்குவார்களே.

இது கேட்டு ராஜகுமாரன் இவ்வந்தரங்கத்தை எவர்க்கும் வெளியிடேன் என வாக்குறுதிசெய்து சிந்தித்த கருமம் சித்தியானாலும் ஆகுமென்று எண்ணி, முயற்சி தொடங்கி முடியுந்தனையும் பகைப்பற்றுக் காத்திருந்தான். வேலை நடந்தேறுவதைக் காலத்திற்கு காலம்போய்ப் பார்த்தான். தடையறத் தீவிரகதி உண்டாய், கனம் குறைந்து உரம் ஏறும்படி புத்தி சூக்ஷ்மமாய் ஏற்பட்டிருந்த பற்பல உறுப்புக்களைக் கண்டு வியப்புற்றான். பருந்தும் கழுகும் பரபரெனத் தொடரினும், அவைகளுக்கு எட்டா உயரத்திற்குப் பறக்கும் அரும் திறம் தனக்கு அமையுமென்று நாள் ஏற ஏற யாந்திரிகனுக்குக் குன்றாத மனவுறுதி உண்டாயிற்று, அம்மனவுறுதி எனும் பிணி ராஜபுதல்வனுக்கும் தொத்தியது. சிறகுகள் குறையற ஒரு வருஷத்திற்குள் செய்து முடிந்தன. யாந்திரிகன் ஒரு தினம் குறித்து அன்று அதிகாலையில் ஏரி கரையிற் புடைத்து எழுந்த மேட்டுத்தரையில் சிறகு கட்டிப் பறக்கச் சித்தமாய்ப்போய் நின்று சிறிது நேரம் சிறகை விரித்து அடித்துக் காற்று வாங்கி, பறக்க உன்னி நின்ற நிலைபெயர்ந்து ஆகாயத்தில் பாய்ந்து இமைப்பொழுதில் ஏரியில் விழுந்தான். ஆகாயத்தில் பறக்க உதவாமற் சிறகு இரண்டும் வாதம் முற்றி வைத்தியன் ஆனாற்போல, ஜல முகத்தில் படிந்து அவனை முழுக ஒட்டாமல் தாங்கிக்கொண்டன. இவ்வண்ணம் பாதி திகிலினாலும், பாதி சஞ்சலத்தினாலும் குறைப்பிராணியாய்ப்போன யாந்திரிகனை ராஜகுமாரன் தாவிப்பிடித்து இழுத்துத் தரையில் விட்டான்.

இந்தக் கலியை நினைந்து இளவரசன் மிதமிஞ்சிச் சிந்தை நொந்து வருந்தவில்லை, எண்ணியபடி, பள்ளத்தாக்கினெல்லை

தாண்டிச் செல்லும் உபாயம் அவனுக்கு இது ஒன்று தவிர வேறில்லையே. ஆனதுகொண்டு தன் எண்ணம் இம்முறை சிதறியும் இனி ஒரு பொழுது சித்திபெறுமென்று எதிர்நோக்கிப் பதைப்புறுதிருந்தான். சமயம் கண்டு சகல பாக்கியத்திற்கும் உறைவிடமாகிய பள்ளத்தாக்கை விட்டு நீங்கும் அபிப்பிராயத்தைச் சாதிக்கவேண்டுமென்று அவன் ஒரு பிடியாய் நின்றான்.

பிற்பாடு அவன் மனம் போக்கற்று ஒரு நிலையாக நின்றது. உலகப்பரப்பில் அடிவைக்கும் உபாயம் ஏதும் உண்டென்று அவனுக்குத் தோன்றவில்லை. பதைப்பற்று ஆறியிருக்க அவன் செய்த எத்தனங்கள் பல அவை ஒன்றும் பலிக்கவில்லை, மனக்குறைநாளொருவண்ணம் அவன் உயிரைக்கொள்ளைகொண்டது. மீண்டும் அவன் துக்கசாகரத்தில் மூழ்கி மனம் தடுமாறினான். அடுத்து மாரிகாலம வந்தது. ஆகவே, நேர்ந்தபடி வனத்தில் உலாவித்திரிய மாளவில்லை.

அவ்வருஷம் கடுமழை நாட்பட வருஷித்தது அதற்கு முன் எப்பொழுதும் அப்படி இல்லை, நாலு திக்கும் சூழ்ந்தமலைகளில் மேகம் மிகு மழை பொழிய அம்மலைகளினின்று தாரைதாரையாய் வீழும் அருவி தாழ்ந்த சம நிலப்பரப்பில் எத்திசையும் பிரவாகித்தது. தங்குநீர்சிறிதுமின்றி அந்தப் பிரவாகமுழுவதும் ஓடி வடிய அங்கே இருந்த கற்புழை விசாலமானதல்ல. ஒடுங்கியிருந்தது. ஏரி நிறைந்து வெள்ளம் கரை புரண்டது பள்ளத்தாக்கு எங்கும வெள்ளமயமாயிருந்தது. அந்தப் பிரவாக முகத்தில் கண்ணுக்குப் பொட்டுப்பொட்டாகத் தோன்றினவைகள் அரண்மனை சமைந்த திட்டும் வேறுசில மேட்டுத்தரையுமே. மாடு ஆடு முதலிய விலங்கினமெல்லாம் அடிவைக்க இடமின்றிப பசும்புன்னிலத்தை விட்டு நீங்கின. மனுஷரோடு பழகிப் படிந்தமிருகஜாதிகளும் துஷ்ட வனவிலங்குகளும் பிரவாகத்திற்குத் தப்பமலை ஏறி ஒதுக்கம் பார்த்து அடைந்தன.

இந்தப் பிரவாக நிர்ப்பந்தத்தால் ராஜபிரபுக்கள் அத்தனை பெயரும் அம்மாளிகையை விட்டு நீங்காதிருந்து அவரவர்க்கு இதமான கேளிக்கைகளில் பொழுது கழித்தார்கள். மனுஷருக்கு உரிய நானாவித நிலைமையையும் தெளிவுற விளக்கும் செய்யுள்

நின்றை இம்லாக் எனும் கவிராஜன் சொல்லக்கேட்டு ராஸிலஸுடைய மனம் அதில் குவிந்து சென்றது. செல்லவே தனிமையாய்த் தன் மாளிகைக்கு வந்து, மீண்டும் அச்செய்யுளைப் பாடும்படி அவன் கவிஞனுக்குக் கற்பித்தான் பின்பு இருவரும் மனம் கலந்து சம்பாஷித்தார்கள் சம்பாஷித்த அளவில் லௌகிக இயற்கையை நன்குணர்ந்து பிரபஞ்ச வியாபாரத்தைச் சாதுரியமாய் வர்ணிக்க வல்ல நிபுணனைக் காண இடம் பெற்றது பெரும்பாக்கியமென்று ராஸிலஸ் ஆனந்த பூர்த்தி யடைந்தான். சாமானியமாய் எவரும் அறிந்த லௌகிக இயற்கைகள் அநேகம் இளம்பருவந்தொட்டு வீட்டுக்குப்புறம் வெளிப்படாதிருந்த அவனுக்குத் தெரியுமா தெரிவது எப்படி. அவன் அவைகளைச் சோர்வறப் பூராயமாய் விசாரித்தறிந்தான் பூலோக வியாபாரத்தைக் குறித்து இளவரசனுக்கு அந்நாள்வரையில் ஏதும் தெரியாதது கண்டு கவிஞன் பரிதபித்தான் விஷயத்தில் நுழைந்து அவன் பூராயமாய்க் கேட்ட கேள்விகளைத் தொட்டுப் பரிவு கூர்ந்தான். அன்றன்று நூதன விஷயங்களை அன்பாய் உரைத்து அறிவு புகட்டினன் இந்த நற்காலக்ஷேபத்தை நிறுத்திவிட்டு இராத்திரிகாலத்தில் நித்திரைசெய்ய எழுந்து போகும்பொழுது ராஜபிரபுவிற்கு மிகு மனஸ்தாபம் உண்டாகும், ஆனாலும் நித்திரையின்றித் தீராதே. மீண்டும் அவ்வின்பகாலக்ஷேபத்தில் பிரவேசிக்கப் பொழுது எப்போது விடியுமென்று மிகு வாஞ்சையோடு எதிர் நோக்கி யிருப்பான்.

ஒரு நாள் இருவரும் கூடி உட்கார்ந்திருக்கையில், ராஸிலஸ் 'உமது பூர்வோத்தரங்களைத் தெரியச்சொல்லும் நீர் பாக்கியம் முதிர்ந்த இப்பள்ளத்தாக்கில் இருக்குந் தனையும் எங்கும் வெளியிடப்படா திருக்க! வந்த நிமித்தம் என்ன' என்று இம்லாக்கைக் கேட்க அவன் சொல்லத் தொடங்கினான். தொடங்கவும், சங்கீத விநோதத்திற்கு வரும்படி தூதன் ஒருவன் விரைந்துபோய் ராஸிலஸை அழைத்தான். ஆனது பற்றி, அவன் அஸ்தமனகாலமாமளவும் தன் ஆசையை அடக்கிக்கொண்டு போனான்.

அத்துவித சித்தாந்தம்.

137-ம பக்கத்தொடர்ச்சி.

அது சுற்றிலும் இருக்கின்றது. இடையிற் பொருளில்லை. வெறும் வெளிதான். அந்த வெளிக்குள் நீர் இருக்கிறது. அந்த நீருள்ள இடத்தில் குடமும், குடமிருக்கிற விடத்தில் நீரும் இல்லை. குடத்துக்குள் இருக்கிற வெறு வெளியில் நீர் இருக்கிறதேயன்றிக்குடமாயிருக்கிற பொருளில் இல்லை அவ்வாறுசிவனுக்குள் வெறுவெளியிருக்கவேண்டும் அவ்வெளியிற்சிவனிருக்கப்படாது. சிவனில்லாத அவ்வெறுவெளியிற்றான் ஆன்மாக்கள் இருக்கவேண்டும். இவ்வுவமானத்தால் குடமும் நீரும் எவ்வாறு நிறைவற்ற பொருளோ, அவ்வாறே சிவமும் ஆன்மாக்களும் நிறைவற்றபொருளாகின்றன. ஆகலால் இவ்வுவமானம் பயன்படாது, இனிப்பாலில் நெய்யிருப்பது போலச் சிவனிடத்தில் ஆன்மாக்களிருக்கின்றனவென்னின் பாலில் நெய்யிருப்பதனால் பாலும் நெய்யும் பரிபூரணமாகாது. பாலிலிருந்து நெய்யை வேறு பிரித்தால் வேறு பிரிந்த நெய், எவ்வளவோ அவ்வளவு எடை அல்லது அளவு பாலில் குறைந்துபோம். பாலிலிருந்துநெய்யைப் பிரித்தால் பிறகு பாலென்னும் பேரில்லை, பாலுமில்லை. தயிரும் நெய்யுமேதானிருக்கின்றன. பாலைக்காய்ச்சி கடைந்தால் தயிரும் நெய்யுமாய்ப்பிரிகின்றது. எது பிரிகின்றதோ அது முன்பே கூடியேயிருக்கவேண்டும் தயிரும் நெய்யும்ஒன்றாகக் கூடியிருந்த காலத்தில் பாலென்றுபேர். பாலென்ற சொல்லுக்கு பொருள் நெய்யும் தயிருந்தான். பொன்னுங் களிம்பும் ஒன்றாய்க்கூடிய போது செம்பென்று பெயர் பிரித்துவிட்டால் பொன்னுங் களிம்பு மாகின்றது. பொன்னுங் களிம்புமன்றிச் செம்பென்னும் சொல்லுக்குப் பொருளில்லை. செம்பு என்பது சொல்லும் அதற்குப் பொருள் பொன்னுங் களிம்புமாம் அங்ஙனமே பால் என்பது சொல்லும் அதற்குப் பொருள் நெய்யுந்தயிருமாம். பாலென்னுஞ் சொல்லுக்குத் தயிர் நெய்களையன்றி வேறே பொரு பொருளிருப்பதாய்க்கருதுவது பிராந்திபே. பாலிலிருந்து தயிர் நெய்களை வேறு வேறு பிரித்து விடுகின்றமையால் அது பின்ன சாங்கியேயாம்.

நெய்யுந் தயிரும் பின்னசம்பந்தியாயிருப்பது போல தயிரும் வெள்ளைநிறமும் பின்னசம்பந்தியாகாது அபின்னசம்பந்தியேயாம். எது பின்னசம்பந்தியோ அது ஒருகாலத்தும் அபின்னசம்பந்தியாகாது அபின்னம் பின்னமாதலும் அபின்னம் பின்னமாதலும் ஒருபோதுமின்று. பாலின்கண் தயிரும் நெய்யும் அபின்னம் போற்றோற்றினும் பின்னம் பின்னமே பாலை அணுபரமாணுக்களாக பிரித்துப் பார்க்கும் சத்தி நமக்கிருந்தால் அதுவேறுவேறாகவே தோன்றும் உப்பு நீரிலும் நல்ல நீர் உப்பு இவைவேறுவேறாயிருக்கின்றன. உப்பு நீரில் நல்லநீர் வேறாகவும் உப்புவேறாகவும் நமக்குத் தோன்றாவிடினும் அவை வேறு வேறுதான். உப்புநீரில நூற்றுக்கு இருபத்தேழுபங்கு உப்பும்மற்றப்பங்கு நல்ல நீரும் இருக்கின்றன. உப்பு நீரைக்காய்ச்சினால் நூற்றுக்கு எழுபத்து மூன்று பங்கு நல்லநீர் ஆவிரூபமாய் மேலே போகமற்ற இருபத்தேழுபங்கு பூமியிற் றங்கிவிடுகின்றது உப்பும் நல்லநீரும் பிரிந்துபோகின்றமையால் அவைபின்னமாகக்கூடியிருந்தனவென்றே சொல்லவேண்டும். உப்புநீரைப்பார்த்தால் நீரும் உப்பும்அபின்னமாய் ஒன்றுபட்டிருப்பதாகவே தோற்றினும் உண்மையில்பின்னமாய்இரண்டுபட்டேயிருக்கின்றன. இரண்டுபட்டேயிருக்கின்றமையால் ஒன்றிருந்த விடத்தில் மற்றொன்றில்லை. அதாவது உப்பு இருந்த விடத்தில் நீரும் நீர் இருந்தவிடத்தில் உப்பும் இல்லை. இதைப்போலவே பாலாயிருக்குங் காலத்திலும் நெய்யிருக்கு மிடத்தில் தயிரும் தயிர் இருக்குமிடத்தில் நெய்யும் இரா. இனி எள்ளில் எண்ணெபோ லென்னில் எள்ளையெடுத்துட பிழிந்தால் பிண்ணாக்கும் நெய்யுமாகப்பிரிகின்றன. பிண்ணாக்கும் நெய்யுஞ் சேர்ந்தே எள்ளென்னும் பேர்பெறுகின்றது. அதுவும் இரண்டுபொருளாய் வேற்றுமைப்பட்டுப் போகின்றமையால் உய்த்து நோக்குழிப் பிண்ணாக்கு இருந்த விடத்தில் நெய்யும் நெய் இருந்தவிடத்தில் பிண்ணாக்கும் இல்லையாகிவேறுவேறு பொருளாகின்றன. ஆதலால் அதுவும்பொருத்தமுடையதாகாது. ஆகாயமானது மற்றவாயு தேயு அப்பு பிருதிவியாகிய இவற்றினிறைந்திருப்பது போல் சிவப்பிரமமானது ஆன்மாவில் நிறைந்திருக்கிறது என்று சொன்னால் யாதுதோஷமென்னில் தோஷம் தோஷமே ஆகாயமானது மற்ற வாயு தேயு அப்புபிரிதிவிகளுடன் காரணகாரிய சம்பந்தம் பெற்றது. மண்ணும்கூட

ழும் போல ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்துதேயுவும். தேயுவிலிருந்து அப்புவும், அப்புவிலிருந்துபிருதிவியும் உண்டாகி ஒடுக்குங்கால் தோன்றிய முறைப்படி ஒடுங்குகின்றனவாக வேதமுதலிய கலைகள் விளம்புகின்றன. ஆதலால் ஆகாயமும், மற்றச் சதுர்பூதங்களும் காரணகாரிய சம்பந்தத்தைப்பெற்றிருக்கின்றனவென்பது மறுக்கப்படாத விஷயம்.

(இன்னும் வரும்.)

பு. ஐயராம்பிள்ளை,

ஆத்ம நேசன்,

சாக்கைய பௌத்தர்கள்.

138-ம் பக்கத் தொடர்ச்சி.

அப்படி செய்துவரினும் முதலி, நாயுடு, செட்டி, ஐயர், எனுந் தொடர்மொழிகளைப் போலிவர்கள் பெயரினீற்றில் பறையன், எனுமொழியை வைத்துக்கொள்ள வெட்கப்படுகிறார்கள். இவ்வித அல்லல்களுக்கு பயந்து பலர்கிறிஸ்தவராகியும், சிலர் மகமதியராகியும் விட்டதுமன்றி நாளுக்கு நாள் இன்னுஞ் சேர்ந்துக் கொண்டே வருகின்றனர். சிலரோவெனில் பறையரெனப் புகலநாணி சமயோஜிதமாய் வேறுபெயர்களைச் சொல்லி மறைவாயிருக்கின்றனர். இதினாலன்றோ சின்னாட்களுக்கு முன் சென்னையின் கண் ஸ்ரீமந்: இரா. ஸ்ரீநிவாசம் பிள்ளையவர்கள் வெளியிட்டுவந்த பறையன், எனுந்தமிழ்ப் பத்திரிகைக்கு பலவித இடுக்கண் செய்து பாழ்படுத்திவிட்டனர். தற்காலம் சென்னை ராயப்பேட்டையில் இருக்கும் தெய்வப்புலமை சங்: க அயோத்திதாஸப் பண்டிதரவர்கள் பூர்வக்கிரந்தங்களை ஆராய்ந்த "தமிழன்" என்னுமரிய பத்திரிகையை நூலாதாரப்படி வெளியிட்டு பூர்வ பௌத்தர்களைத்தான் பறையரெனத் தாழ்த்தியிருக்கின்றனரென வநேக ஆதாரங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோலெடுத்துக்காட்டி வருகின்றனர்; இதற்குமிடையூறு விளைக்கச் சிலர் தோன்றியுள்ளதை நோக்கில் பரிதாபத்திற் கிடந்தருகிறது. அந்தோ பறையனென்றாலும் பழி; தமிழனென்றாலும் பழி; இவ்வி

தக் கோளரிகள் நமக்குள்ளேயே செய்துக் கொண்டால்
ஜெயம்பெறுவ தெங்ஙனம்? என்றுசீர்ப்படப்போகிறோம். ஊரிரு
கட்சிப்படின் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்ற பழமொழிப்
படி அன்னியர் நம்மைக்கேவலம் மதிக்காதிருப்பார்களா? நம்
மைப்பற்றி யவர்களக்கரை யெடுப்பதுமில்லை சேர்ப்பது மில்லை.
நாளது வரையில் பறையர்களை நாயினுங்கடையாய் மதித்து ரோ
ட்டுகளில் நடக்கவிடாமலும், குளங்களில் குடிக்ககுளிக்கவிடாம
லும், நல்லாடைகளை யுடுத்தவிடாமலும், பாதரட்சை குடைமுத
லியவைகள் தாங்கவிடாமலும் நாமம் விபூதியணைய விடாமலுஞ்
செய்துவருகின்றனர். இவையெல்லாஞ் சென்னைவாசிகளும்
தலைமைப் பெற்ற விடங்களிலிருப்போரும் மறுக்கக்கூடும். அவ்
வித அன்பர்கள் நாட்டுப்புறங்கட்குவந்து பார்த்தால் தங்களை
அன்னோர் சேர்ந்து நிற்பது சமயோஜிதமென விளங்கும் பறைய
ரெனத்தாழ்த்தப் பட்டிருக்குமென்னினத்தவராகியபௌத்தச்ச
கோதரர்களே சற்றுசவனியுங்கள் நாமீ ஆரிய மதத்தை யொப்புக்
கொண்டு ஆரியமதத்தைத் தாங்கி நிற்குமளவும் பரமசிவனிடத்
தில் மாட்டிறைச்சி திருடிய படியால் நீக்கப்பட்ட பறையரென்
றே சொல்வார்கள். நம்மினத்தவரி லனேகர் சைவவைணவ பக்தி
மான்களாக விருந்தும் அவர்களைப் போலநடித்துக் காட்டினாலும்
எந்தக் கோவில்களிலும் சேர்ப்பதில்லை யென்பதநுபவம். நாம்
நமது கல்வித்திறமையால் சைவரென்றும் வைணவரென்றும்
வேதாந்தி யென்றுமீ வெளிவரினும் பறையரென இழிகூறிதூஷி
க்கின்றனர். இவ்விதம் நம்மை புறக்கணிக்கும் மதத்தி லிருந்
தென்ன பலன் இதையெலா மெடுத்தோதி சகோதரரே! சகோத
ரரே! யென தாவியணைக்கு மன்பர்களை யகற்றி பகைவர் துரத்தி
னும் பின்பற்றுதல் விவேகமாகுமா? பௌத்தச் சகோதரர்களே!
நாமெல்லோரும் ஒற்றுமை யோடிருந்து ஆங்காங்கு மடங்களை
யுங் கோவில்களையுங் கட்டி பாடுபட்டால் பயன் பெறுவோம்.
ஆஃதொருவா றிருக்க பிரபுக்களாயுள்ளவர்க ளன்னியர் விஷயத்
தில் செலவிடும் பணங்களை தாழ்ந்து கிடக்கும் நம்மினத்தவர்
களுக்கு கல்விச்சாலையுங் கைத்தொழிற்சாலையு மேற்படுத்தி
ஆதரியுங்கள் நமது குலத்துக்கென பாடுபட முன்வந்தவர்களை
ஆதரித்து உற்சாகப் படுத்திவந்தால் வெகும்மேலானதா யிருக்கு
மதைவிட்டு நாமும் முன்னேறாமல் முன்னேறிப் பாடுபடுபவர்க
ளையும் பின்னுக்கிழுத்தால் குருடனுக்கு குருடன் வழிகாட்டிய
கதையாய் முடியும். நம்மைக்கெடுத்து வஞ்சினமென்னுங் கயிற்
றினால் கட்டிவதைசெய்பவர்கள் நம்மைமுன்னுக்கு கொண்டு
வருவார்களா? முன்னேறுங்கால் கூடவிருந்தே குடி கொடுப்பார்
கள் வித்தைக்காண்பித்த வுடனே மரமாகுமா? என்றுமெப்படி
அதைநட்டுப்பயிராக்கி கிளைப்பற்றி வந்தால் பயன்தருமேயன்றி

இப்போதே தருமா? ஆதலால் பௌத்தச் சகோதரர்கள் ஊக்கமது கைவிடேலென்னும் ஔவை பிராட்டியார் வாக்கைக் கடைபிடித்து உழைப்போமேயாமாகிலொருகாலத்தி லுயர்வுபெறலாம்.

சாம்பியன் ரீப்ஸ்
கோலார் கோல்ட் பீலட்ஸ்

(இன்னும் வரும்.)
ஆன்ரேர்க் கடிமை
A. P பெரியசாமிப் புலவர்.

(ஸ்ரீராம கிருஷ்ணபரமஹம்ஸ தேவர் திருவாக்கு.)

குரு தூஷணம்.

சிஷ்யன் ஒருபோதும் தன் குருவைத் தூஷிக்கக்கூடாது. குருசொல்வதையெல்லாம் சிஷ்யன் கட்டளையெனக் கருதி பயபக்தியுடன் சிரஸா வஹிக்கவேண்டும்.

பங்காளிபாஷையில் ஒரு பாட்டு உண்டு, அதன் பொருள் என்னவெனில் எனது குரு சுராபான லோலராய்ப் பாபிகள் கூடியிருக்கும் நீச ஸ்தானங்களுக்கேகினும் எனக்கு மாத்திரம் அவர் நித்யாநந்தராயரே யாவர்.

முத்தை யெடுத்துக்கொண்டு சிப்பியை யெறிந்துவிடு. உன் குரு உனக்குபதேசிக்கும் மந்த்ரத்தைமாத்திரம் கிரஹித்து அவரது மாநுட ஸாமாந்யமாகிய குற்றங்களைக்கவனியாது விட்டுவிடு

யாவரேனும் உன் குருவை தூஷித்து நிந்திப்பரேல் நீ அதைக் கவனியாதே. உடனே அவனை விட்டப்புறஞ்செல்.

தன்குருவைக் கேவலம் மநுஷ்யமாத்திரனெனக் கருதுகின்றவன் செய்யுஞ் ஜபதபங்களால் என்ன ப்ரயோஜநம் உண்டாகப் போகின்றது? நமது குருவை ஸாமாந்ய மனிதனென நாம் கருதுதல் கூடாது. சிஷ்யன் பகவானைத் தரிசிக்குமுன், ஞானோதயமானவுடன் குருவையே முதலில் தரிசிக்கிறான். இந்தக் குருவே ஆச்சரியப்படத்தக்க வண்ணம் ஈஸ்வர மூர்த்தமாய் மாறி சிஷ்யனுக்குப் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தை யநுக்கிரஹிக்கின்றார் அப்பொழுது தான் குருவும் ஈசனும் ஒன்றேயெனச் சிஷ்யன் அநுபவத்தால் அறிகின்றான். சிஷ்யன் என்னவரம் கேட்டபோ

திலும் ஈஸ்வர வடிவமாய்விளங்கும் குருமூர்த்தி யளிக்கின்றார். அதுமாத்திரமின்றி நிரதிசயமான நிர்வாணபதவியைக் கேட்டா லும் அளிக்கின்றார். அல்லது ஆண்டான் அடிமையெனும் ஸம் பந்தத்தை வைத்துக்கொண்டு த்வைத பாவனையிலேயே யிருக்க விரும்பினாலும் அதையும்அநுக்கிரஹிக்கின்றார். சிஷ்யன் எதைக் கேட்டாலும் அதையெல்லாம் அளித்தருள குரு ஸித்தமா யிருக்கிறார்.

பாங்கு நெல்.

இது சிலவருஷங்களுக்கு முன்னால் மத்திய மாகாணங்களி லிருந்து இவ்விராஜதானிக்கு நூதனமாய்க் கொண்டுவரப்பட்ட ஒரு தினுசு நெல். அது வெண்மையான நீண்ட நேர்த்தியான மெல்லிய அரிசி யுடையது. ஆகையால் அது நாகரீகம் மிகுந்த ஜனங்களின் போஜனத்துக்கு ஏற்ற அரிசியாகும். ஆனால் பாங் கு நெல் அரிசியானது நீளமாயிருப்பதால், அதைக்குத்தி அரிசி யாகும்போது மற்ற உருண்ட அரிசியாயுள்ள தினுசுகளில் உண்டாவதைப் பார்க்கிலும் அதிகமான குறுநொய் உண்டாகி றது. புழுங்கல் அரிசி குத்திசாப்பிடும் ஜனங்களுக்கோ இத னால் பாதகமில்லை. ஏனெனில் நெல்லை அவித்துக் குத்தும் போது அரிசி அதிகமாய்உடைந்து குறுநொய்யாவதில்லை. கார் போகத்தில் சாதாரணமாய் பயிரிடும் மற்ற தினுசுகளைப் பார்க்கி லும் இது மெத்தசிறந்தது மேலும் அதில் கிடைக்கும் மேனி யும் அதிகம். அது பக்கம் வைத்துக் கிளைத்து மூடுகட்டும் சுபா வம் அதிகமாயுள்ளது. ஒற்றைத்தனிமுதலாய் நட்டாலும், கலப்பாய் விதைத்தாலும் சிலாக்கியமான மாசூல்தரத்தக்கது. காரில் சாகுபடி செய்தால் இது விளைவாக 4 முதல் 4½ மாதம் வரை செலலும். வடமலையாளம் ஜில்லாவில் முதல்போகம் நெல் சாதாரணமாய் செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் அறுவடை யாகும். அங்கே இந்த தினுசு விளைவுக்குவர 5 மாதம் சென்ற போதிலும் விசேஷித்த பலனைக் கொடுக்கிறது சம்பா சாகுபடி காலத்தில் (அதாவது திருநெல்வேலியில் பிசானம் மேல் கறை யில் இரண்டாம்போகம்) இந்த தினுசு 4 முதல் 4-½ மாதத் தில் விளைவுக்குவரும். இந்தக்காலத்தில் தண்ணீர்த்தட்டு சம்ப விக்கக்கூடிய இடங்களிலும், ஆறுமாதப் பயிருக்குத் தண்ணீர் இறைப்பதில் நேரிடும் செலவு மட்டுக்கு மிஞ்சினதாயிருக்கு மி டங்களிலும், இந்த தினுசு நெல் சாகுபடிசெய்ய லாயக்குள்ளது மற்ற சாதாரண தினுசு நெல் பயிரைவிட இந்த பாங்குநெல்பயிர் தண்ணீர்த்தட்டு அதிகமாய்த்தாங்குவதுமன்றி, அந்தக்காலத்துக்

குத் தக்கபடி மற்ற தினுசுகளைப்பார்க்கிலும், சிலாக்கியமான மேனிதரும். ஆனால் பாய்ச்சல் ஆதாரங்களில் ஆறுமாதப்பயிருக்குப்போதுமான தண்ணீரிருக்கும் பக்ஷத்தில், இதைவிட சம்பா நெல்லையே பயிரிடுவது உசிதமாகும். சிறுபாத்திகளில் இந்த தினுசு நெல்லைச்சாகுபடி செய்து கேழ்வரகுபயிருக்குத்தண்ணீர் இறைப்பதுபோல் ஐந்து நாளைக்கொருதண்ணீர் இறைத்து கேழ்வரகுப்பயிருக்குச் செய்வது போலவே பருவம் செய்து வந்ததில் சிலாக்கியமான மாசூல் கிடைத்தது. இதனாலே இந்தத் தினுசுக்கும் நன்செயில் சாகுபடியாகும் மற்ற தினுசுகளுக்கும் தண்ணீர்த்தட்டைத் தாங்கும் இயற்கையில் எவ்வளவுபேதமிருக்கிறதென்பது நன்றாய்வெளியாகும். ஜனவரி முதல் மேமீ வரையுள்ள வேனிற்காலத்தில் இது சாகுபடிசெய்யத் தக்கதல்ல; ஏனென்றால் அம்மாதங்களில் சாகுபடிசெய்தால் அது விளைவுக்குவர, ஜூன் ஜூலை மாதங்களில் சாகுபடி செய்யும்பயிர் அறுவடையாகும் காலம்வரை செல்லும்.

4th February 1909. H. C. SAMPSON,
Dy. Director of Agriculture.

ஒரு சிறுபையனும் அவன் சகோதரியும்.

முற்காலத்திலே ஒரு கனவானுக்கு ரத்தினமென்று ஒரு மகனும் குணபூஷணியென்று ஒருமகளும் இருந்தார்கள் இம்மக்களுடைய இளமைப்பருவத்திலேயே அவர்களுடைய தாய் இறந்து போகவே அவன் மறுவிவாகம் செய்துகொண்டான். அம்மாற்றாந்தாய் அந்த மக்களை மிகவும் பகைத்துக் கொடுமையாக நடத்திவந்தாள். அதுகண்டு ஒருநாள் ரத்தினம் குணபூஷணியைப் பார்த்து, என் செல்வச்சகோதரியே நம்முடைய அருமைத் தாய் இறந்துபோனது முதல் ஒருநாழிகைகூட நாம் சுகப்படவில்லை மாற்றாந்தாய் நம்மை எப்போதும் அடித்துத் திட்டுகிறாள் நாம் அவள் கிட்டப்போனால் காலால் உதைத்துத் தள்ளுகிறாள். பருக்கையும் காந்தலுமாய் ஏதாவது கொஞ்சம் மிகுந்திருந்தால் அதையே நமக்கு உணவாகக் கொடுக்கிறாள். அவள் போடுகிற சோற்றை நாய்கூடத் தின்னாது. இப்படியாக வருந்திக் கொண்டு நாம் இங்கே இருந்தாவதென்ன? எங்கேயாவது ஓடிப்போய்ப் பிழைக்கலாம் வருகிறாயா என்று அழைத்தான். அதற்கு அச்சிறுமியும் சம்மதிக்கவே அவர்கள் இருவருமாய் வெளியே போகப் புறப்பட்டுத் தனியே வயல்களும் காடுகளு

மாய் நெடுந்தூரம் நடந்து போனார்கள். நடுவழியில் மழை பெய்தபோது, நம்முடைய பரிதாபத்தைப் பார்த்துத் தெய்வந் தான் இப்படிக் கண்ணீர் விடுகிறதோ என்று சொலிக் குண பூஷணி விசனமடைந்தாள். அப்படியே அவர்கள் வருந்திக் கொண்டு போகையில் ஒரு பெருங்காட்டிலே பொழுது போய் விட்டது. வழி நடந்துவந்த வருத்தத்தாலும், வெயிலின் வெப் பத்தாலும், பசியினாலும் அவர்கள் மிகவும் இளைப்படைந்து அப் புறம் எங்கும் போகமாட்டாமல் அங்கிருந்த ஒரு பெரிய மரப் பொந்திலே படுத்துக்கொண்டார்கள். அவர்களுக்குப் படுத்தது தான் தெரியும், ஆயாசத்தினால் உடனே மெய்மறந்து தூங்கிப் போனார்கள். காலையில் உதித்து நாலைந்து நாழிகை வரையில் அவர்களுக்கு நித்திரை தெளியவில்லை. அவர்கள் நித்திரை தெளிந்து எழுந்து பார்க்கும்போது வெயில் சுறிலென்று உறை த்தது. எழுந்தவுடனே பையன் அதிக தாகங்கொண்டு அக்கா ளைப்பார்த்து, தாயே எனக்கு நாவறண்டு போகின்றது. உட னே எங்கேயாவது ஓடிப்போய்த் தண்ணீர் தேடிக் குடித்தா லொழிய நான் ஒரு அடிகூட நடக்க மாட்டேன் என்றான். அது கேட்டுக் குணபூஷணி, மகனே, அருகாமையில் ஒரு காட்டாறு ஓடுவதாகக் கேள்வி, போய்ப்பார்ப்போம் வாவென்றாள். அப் படியே அவன் அவள்கையைப் பிடித்துக்கொண்டு மெல்ல நடந் துபோனான்.

அந்தப் பிள்ளைகளுடைய மாற்றாந்தாய் சாதாரணமான பெண்ணல்ல, ஒரு கொடிய மாயக்காரி. இம்மக்கள் ஊரைவிட்டு ஓடிப்போனது அவளுக்கு நன்றாய்த் தெரியும். ஆகலால் அவர் களுக்குத் தெரியாமலே அவள் அவர்கள் பின்னே பதுங்கிக்கொ ண்டு போய் அக்காட்டிலுள்ள ஊற்றுக்களையெல்லாம் தன்னு டைய மாயத்தால் மறைத்து விட்டாள்.

இப்படியிருக்க இவர்கள் போனவழியிலே சிற்றாறு ஒன்று காணப்பட்டது. அதைப் பார்த்தவுடனே ரத்தினம் அதிக ஆவலோடு அதிலுள்ள நீரைக் குடிக்க ஓடினான். அத்தருணத் தில், "என்னுடைய தண்ணீரை எவன் குடிக்கிறானோ அவன் புலியாய்ப் போவான்" என்று ஒரு சத்தம் குணபூஷணிக்குக் கேளாதிருக்குமானால், உடனே அவன் அதைக் குடித்துவிட்டு இருப்பான். அந்தச் சத்தத்தை கேட்டவுடனே அவள் தன் தம்பியின் கையைப் பிடித்துக்கொண்டு, "குழந்தாய், இந்தத் தண்ணீரைக் குடியாதே குடித்தால் நீ புலியாய்ப் போவாய் என்

று ஆகாயவாணி சொல்லுகிறது. அப்படியானல் அப்புறம் நான் என்னசெய்வேன்? வேண்டாம்'' என்றுவேண்டிக் கொண்டாள். தாகம் அதிகமாகி மிகவும் தவித்துக்கொண் டிருந்தாலும் அச்சிறுவன் அவளுடைய நற்போதனையைக் கேட்டு, ஆயின் இன்னும் எங்கேயாவது குளம் கண்டால் தண்ணீர் குடிக்கலாம். வா போவோம் என்ருன்.

அப்படியே போகையில் வழியே மற்ருெரு ஓடையில் நீர் நன்ருய்த் தெளிந்து ஓடிக்கொண் டிருந்தது. அவ்வோடையில் நீர் குடிக்கச் சிறு பையன் களிப்புடன் ஓடும்போது "என் தண்ணீரைக் குடிப்பவன் கோனுயாய்ப் போவான்'' என்று ஒரு ஆகாசவாணிதொனிஉண்டாயிற்று. அதைக்கேட்டுக்குணபூஷணி மிகவும் அச்சங்கொண்டு தண்ணீர்குடிக்க ஓடின தம்பியை நிறுத்தி, என் செல்வமே! நீ இவ்வோடையில் ஒருபோதும் தண்ணீர் குடியாதே குடிப்பவர்கள் கோனுயாய்ப் போவார்களென்று அசரீரிவாக்குச் சொல்லுகின்றது. நீ குடிப்பாயானல் உடனே கோனுயாக மாறி என்னைக் கொன்றுவிடுவாய்'' என்ருள். ரத்தினம் இந்தத் தடவையும் அக்காள் பேச்சை அலக்ஷியம் பண்ணமல் அங்கீகரித்து, "ஆனல் வா வேருெரு நீர்த் தடாகத்திற்குப் போவோம். அங்கே நீ என்னதடை சொன்னுலும் நான் கேளேன் எனக்குத் தாகம் மிகவும் அதிகமா யிருக்கிறது. தப்பாமல் தண்ணீர்குடித்துத் தணித்துக் கொள்வேன் என்ருன். அப்படியே அவர்கள் அவ்விடம்விட்டு அப்புறம் போனர்கள். சிறிது தூரத்துக்கப்பால் பெரிய தடாகமொன்று இருந்தது. அதனண்டை போகையில், "என் தண்ணீரைக் குடிப்பவன் மானுக மாறிப்போவான்'' என்று ஒரு வார்த்தைக் கேட்டது. அது தன்காதில் விழுந்தவுடனே அச்சிறுமி தன்தம்பியைப்பார்த்து, குழந்தாய், நீ இக்குளத்து நீரைக் குடிப்பாயானல் நான் உன்னைப் பறிகொடுத்துப் புலம்பும்படியாகுமென்று சொல்லி அழுதாள். ஆயினும் அவன் பேச்சைக்கேளாமலே அவன் கொஞ்சம தண்ணீர் குடித்து விட்டான். நீர்த்துளியொன்று அவன் நெஞ்சிலிறங்கினவுடனே அவனுக்கு மான்வடிவம் வந்து விட்டது.

ஐயோ! அந்த நடுக்காட்டில் தனியே அந்தச் சிறு பெண் என்ன செய்வாள். தன் அருமைத் தம்பிக்கு நேர்ந்த விபத்தைப் பார்த்து, "பட்டகாலிலே படும், கெட்டகுடியே கெடும்" என்கிறபடி, திக்கற்றவர்களான நமக்குச் சங்கடத்தின்மேல் சங்கடமாய் வருகிறதேயென்று கதறிப் புலம்பினாள். மானாக மாறின தம்பியும் அவள் படுகிற துக்கத்தைப் பார்த்து அவள் காலண்டை வீழ்ந்து கண்ணீர் விட்டுக் கதறினான் அதன் பரிதாபத்தைப் பார்த்துக் குணபூஷணி, என் அருமை ! மான்குட்டியே நான் உன்னை ஒருபோதும், விடுவதில்லை. என்னோடு கூடவே வைத்துக்கொண்டு காப்பாற்றுகிறேன் நீயும் என்னை விட்டுப் போகாதே யென்று சொல்லி, தான் அரையில் கட்டிக்கொண்டிருந்த பொன் சங்கிலியை அவிழ்த்து அந்தமான் கழுத்தில் கட்டி அருகாமையி லிருந்த ஒரு கயிற்றை அதிலே கட்டிப் பிடித்து அதை நடத்திக் கொண்டு போனாள். போகப் போகக் காடு மிகவும் பயங்கரமாயிருந்தது. அப்படியே நெடுந்தூரம் போகையில் அங்கே சிறிய குடிசையொன் றிருந்தது. அதனுள் ஒருவருமில்லாம லிருப்பதுகண்டு குணபூஷணி இங்கேயே நாம் சில காலம் வசித்துக்கொண்டிருக்கலாமென்று எண்ணித் தன் அருமை மானை அங்கோரிடத்தில் கட்டிவிட்டு மெல்லிய தழைகள் கொண்டுவந்து அவற்றால் அதற்குப்பஞ்சணைபோல மெத்தெனப் படுக்கையொன்று அமைத்தாள். பின்பு அவள் நாள்தோறும், காலையில் தனக்காகக் காய், கிழங்கு, வகைகளும், மானுக்காக இளம்புற்களும் தேடிக்கொண்டு வருவாள். அந்தப் புற்களை மான் கன்று அதிக ஆவலோடு கறித்து மென்று தின்று அவளண்டையே விளையாடிக் கொண்டிருக்கும். பொழுது போனவுடனே அந்தப் பெண் தன் வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு மானின் முதுகின்மேல் தலைவைத்துக்கொண்டு படுத்துத் தூங்குவாள். தன் சகோதரன் மாத்திரம் மானாக மாறாமல் இயற்கை வடிவத்தோடிருப்பானானால் ஒரு குறையுமில்லாமல் அவள் அவ்விடத்தில் சவுக்கியமாகவே வாழ்ந்துகொண்டிருப்பாள். அந்த விசனமொன்றே அவள் மனதை எப்போதும் வருத்திக்கொண்டிருந்தது.

(இன்னும் வரும்.)

விபசார வாள்.

நேரிசை வெண்பாக்கள்.

திருவினும் நல்லாளாய்த் தேவி யிருக்க
பெருக்கத்தால் மற்றோன் பிரியை—விரும்புத
லெத்தன்மைப் போலெனி னிக்கைவிட்டுப் புல்லையுண் ணுஞ்
சுத்தமற்ற மாவெனவே சொல்.

பிறன்மனை யிச்சித்துப் பீடழிந்தோய் நாளும்
அறன்பல செய்யினு மாகா—பிறனுமுன்
இல்லாளை யிச்சிப்பா னென்று மனைதறிந்து
செல்லா திருப்பிற் சிறப்பு.

இளங்கொடிப் போன்றவொரு இல்லா ளிருக்க
களவுகொண்டா னன்னியன் கர்ந்தை—யளவையில்
நாயிக்கும் பேயிக்கும் நாற்ற வுணவாகி
யாயுட் கழித்திறப் பான்.

நல்லார் பலர்கூடி நன்மாலை சூட்டிவைத்த
இல்லாளை விட்டு இடைசிறுத்த—பொல்லா
விலைமகளை நம்பி விடமுண்ட மூக
னலைவதைப்போ லானு னரோ.

என்னுயிருக் கானதுணை யென்பாரி யாளிருக்க
வுன்னைத் துணையென் றவப்பேனே—பொன்விரும்பி
கல்லார்க்கும் பொல்லார்க்குங் கைநீட்டும்பேய்மகளே
யெல்லோர்க்குந் தீயவனீ யே.

அறுசீர் விருத்தங்கள்.

மூத்தவர் சொன்ன புத்தி முழுவது மறந்தாற் போல
ஆந்திரந் தணிக்க வொண்ணு தரிவையின் மோகத் தாலே
நேத்திர மற்ற வேழை நிதியைநீ களவு செய்ய
பாத்திய கார ருன்னைப் பார்த்துதான் சிறையிட் டாரே.

வேசியை நாடி யுன்றன் வீட்டைவிட் டவளி லேகி
யாசையாய்ப் பணத்தைத் தந்து ஆலிங்கனமுஞ்செயது
நேசமாய் சிலகா லாட நிகழ்ந்ததை யுரைக்க கேண்மோ
கோசத்தில் ரோக மாகி கொடியப்போ லானாய் நீயே.

த. தாமஸ்.

சென்னை 1909௵ ஜுன்மீ 15உ

அரசாங்கம்.

பூமண்டலம் புகழ மங்காத கீர்த்தியை யுடையவராய் அரசு புரியும் நமது ஆங்கிலேய அரசு செங்கோலையாகுமன்றி கொடுங்கோலாகாதென்பது உள்ளங்கைநெல்லிக்கனிபோல் யாவருக்கும் விளங்கும். இதற்குத் திருஷ்டாந்தமாக வேறுபலவகை கூறாவிடினும், அவர்களரசாட்சி நெடுநாளிருப்பதே போந்த சாக்ஷியாம். ஆயினும், நமது கருணைபொருந்திய உலகமாதாவெனச் சொல்லத்தகும் விக்டோரியா சக்ரவர்த்தினியாருடைய ஆளுகை காலத்திலிருந்த சுக சௌகரியங்கள் தற்காலம் குடிகளுக்குக் குறைவாகவே காணப்படுகிறது. இது யாது காரணம் முற்காலத்தில் இந்தியாவைப் பலவரூகப் பலப்பலர் அரசுபுரிந்தாண்ட காலத்தில், (பூரணஞானம் நிறையப்பெற்றிருந்த இந்தியா) ஆரியரின் குடியேற்றத்திற்குப்பின் நயவஞ்சகத்தாலும் தன்னயங்கருதியுழைத் தன்னியருக் கிடுக்கணுண்டாக்கி ராஜாக்களைத் தம் வசப்படுத்தியதால் குடிகளுக்குப் பலவகையான தீங்குகளுண்டாயின. இவர்களிவ்வாறு செய்வதற்கு மூலகாரணமாக ஜாதி ஜாதி யென்ற பெருங்கட்டை நிருமித்து இந்தியாவின் ஆதி செல்வத்தையும் ஞானத்தையும் கெடுத்தார்கள். இந்த சாதியாச்சாரம் நிலை நிற்குமாறு கோயில்களை யுண்டாக்கி பாகுபாடுகளை நிலைநிறுத்தினார்கள். ஆகயாகிய கோயிலையும் அறிவாகிய கடவுளையும் அறியாதார் சிற்பன்கட்டிய கோவிலுக்குள்ள ஞானத்தை எங்ஙனமறிவார். ஆதலின் அக்கோவிலுக்குச் சார்பாக

சாமியையும் ஆரியர்களின் அசம்பவங்களையும் பொருத்திக் கொண்டார்கள். இதனால் யாவருக்கும் பொதுவாக பகவானும் ஆதியந்தமில்லாத வேதாகமங்களும் அநேக நல்லோர்களுக்கு மறைவுபட்டு, ஓர்வகை சார்பாயேற்பட்ட மனுநீதி முதலியன தலைகாட்டி வந்தது. இதனால் சில காரியங்கள் குறைவுபட்டன. இவ்வியாவற்றிக்கும் முதன்மைப் பெற்றவர்கள் பாரசிக தேயத்திலிருந்துவந்து குடியேறிய ஆரியர்களேயாம். இவர்கள் ஒருபோதும் இந்தியர்களாகார்கள். இவர்களந்நாளையில் பலவிதமான இடுக்கண்களைச் செய்து வந்தது போலவே இக்காலங்களிலும் மென்மேலும் செய்துவருவதினால் ஏழை குடிகள் முன்னையிலுந் தொந்தரை யதிகரித்து வருந்த வேண்டியதாயிருக்கிறது.

கபட நாடக சூத்திரராய் தாங்கள் நன்மையடைய குடிகளைத் தூண்டியும்,தாமடைந்த கல்வியின்பெருக்காலுஞ் செல்வப் பெருக்காலும், தற்காலம் அரசாங்கத்திற்கு நன்மை புரிபவர் மீபாலும் செப்பவரோர் சார்பார். சுதேசியம்,சுதேசியமென்னும் வெறுவாய் மெல்லும் செயலுக்குத் தூண்டுதலையாயு மிருப்பாரொருசாரார். இவர்களிவ்வாறு ஆறுதல் செய்து, கொடுங்கோலரசர்களாகிய அநேக தமிழ் அரசர்களிடமிருந்து நம்மை மீட்டு அன்பாயாண்டுவரும் அரசாங்கத்தாருக்கும் இடையூறுண்டுபண்ணும் விதமாக பற்பலகாரியங்களைச்செய்ததினால்இந்தியாவானது வெளிநாடு சரக்குகளின் பூரணவருத்தின்றி உள்நாட்டு சரக்குகள் விலையேறப்பட்டு ஏழை குடிகளுக்குத் தீராத்துயரத்தையும் நஷ்டத்தையும் பஞ்சகால வருத்தத்தையு முண்டாக்கியது. அதனுடன் இவர்கள் போன்ற ராஜவிசுவாசமில்லாதவர்கள் புரிந்த கொட்பாட்டால் மற்றும் ராஜவிசுவாசிகளுக்கும் எவ்வளவோ புதுச்சட்டங்களும் வேறு வேறுவிதமான மாறுதல்களு முண்டாயின. இம்மாறுதல்களால் ஒரு சிறு குடியை அதன் எஜமான் தனது சுவல்ப வருமானத்தால் பாது காப்பதற்கு மெத்த கடினமாய் விட்டது. அதுபோலவே ஏதோ பூர்வத்தில் தேடிய பொருள் மலிவாலேயோ பிதுராச்சிய பொருளாலேயோ; மற்றெவ்வகையாக வந்த பொருளாலேயோ திரவிய சம்பன்னராயிருப்பவர்கள் செய்யவேண்டிய ஜனுங்ககாரியங்களநேகமாக விருப்பினும்

பல்வகைவீண்டம்பங்களில் செலவு செய்து அரசாங்கத்தார் பிரமிக்கும் வண்ணமும்,வருந்தும் வண்ணமும் பற்பலபடோடோப காரியங்கள் செய்வதினால் இந்தியா பெருஞ்செல்வ பூமியென்று கருதி நாளடைவில் இந்தியாவின் பணங்கள் வெளியேறிச் செல்லவும், நம்போலிய ஏழைகுடிகள்! நாளடைவில் மெலிவுற்று வருந்த நேரிடுகிறது. கருணை தங்கிய அரசாட்சியார் இத்தகையானவர்கள் சிலர் பொருட்டு நாளுக்குநாள் வரிகளை யுயர்த்தி நலியச் செய்வதைச் சற்று யோசிப்பார்களானால் வருந்து மேழைகுடிகள் சற்று சுகமடைவார்களென்பதற்குச் சந்தேகமில்லை அத்தகை அயோக்கிய இந்தியர்களை யடக்கியாள்வதும் துன்மார்க்கர்களைத் தண்டிப்பதும் நமது செங்கோல் நடத்தும் கவர்ன்மெண்டாருக்கு ஒத்ததேயாயினும்,ஏழைகளுக்கும் ராஜவிசுவாசிகளுக்கும் அவர்களால் வரிமுதலிய வற்றையுயர்த்தியும் புதுப்புது சட்ட திட்டங்களை நிர்மாணித்தும் சங்கடமேற்படுத்துவது இன்னும் யோசிக்க வேண்டியதாயிருக்கிறது. இந்தியா மீதுள்ள அன்பைக் கெடுத்துவிட, சிலஇந்தியர்களை காரணமாக விருப்பதினால் அவர்கள் பற்றி பல இந்தியர்களுக்கும் துக்கமுண்டாக்காதிருப்பதே கடன். சென்ற சிறிது காலத்தில் தனது சுய நன்மையை நோக்கிப் படித்துத்திரும்பி ஊரச் சென்றிருந்த மதார்லால் என்னும் ஓர் இந்திய மாணவன் சரியான காரணமின்றி கனந்தங்கிய சர் உல்லியம் கர்சன் உவல்லி யென்பவரைச்சுட்டுக் கொன்றது அநியாயமாகையா லிவன் பொருட்டு எல்லா இந்தியர்களையும் நிக்கிரகிப்பதும், இங்கிலாண்டு தேசத்துக்குப் படித்தற்பொருட்டும் செல்ல விடாதிருப்பதும் நியாயமாகுமா? இவ்வாறேதத்தமக்குரிய சுயநன்மைகளைக்குறித்துஏனையோர்களை யுபத்திரவத் துட்படுத்தும் சிலர் பொருட்டும் அவர்கள்வீண்சாதியாசாரத்தைப் பற்றியும் அவர்கள் விருத்தியைக் கோரியும் உழைத்தாலுஜிதமாகாது.

இவர்களிலநேகர் முன்னின்று யாதுமறியாதாரை முன்னேறவிட்டு தீமைச் செயலுக்குள்ளாக்கித் தாங்கள் மறைவுறுகிறார்கள், இம்மித்திர பேதிகளை நசிப்பதற்கு ஒவ்வொரு பிரிவுகளிலும் ஓர் மிலிட்டரி உத்தியோகஸ்தரை நியமிப்பது உஜிதம். அவ்வுத்தியோகஸ்தர்களுக்கு எவ்விதமான வேஷப் பிராமணர்களை எந்தவிதத்தும் சாராதிருக்கச் செய்வதுத்தமம். அவ்வாறு செய்வார்களானால் (ஆதி திராவிடராம்) பூர்வதமிழர்கள், அதாவது இந்தியர்களில் ஏழைகளாயுள்ளவர்கள் தற்காலம் படும் கஷ்டநிஷ்டூரங்கள் குறைவுபட்டும் நமதுராஜாங்கத்தாருக்கு மங்காப் புகழ்ச்சியையும் உண்டாக்கும். சுபம்! சுபம்!! சுபம்!!!

ஆத்திசூடிக் கான திருக்குறள்.

கடிவதுமற.

ஒருவரைக் கடிந்துபேசுவதை மறந்துவிடு.

10-ம்-அதி-இனியவை கூறல்-9-ம்-செய்யுள்

இன்சொலினி தீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

பிறர்சொல்லிய வின்சொல்லானது தனக்கின்பந் தருதலை யனுவித் தறிகின்றவன் பிறரிடத்துக் கடுஞ்சொல்லைப் பேசுவ தென்ன பிரயோசனத்தைக் குறித்தோ வதுதெரிந்திலே மென்பதாம்.

காப்பது விரதம்.

உன்னாலே காப்பாற்றத்தகுவது, விரதமேயாம்.

77-ம்-அதி-தவம்-1-ம்-செய்யுள்.

உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு.

உண்டி சுருக்குதன் முதலாகிய விரதங்களால் வருந்துன்பங் களைப் பொறுப்பதும் பிறவுயிர்களுக்கு நோய் செய்யாமையு மாகிய, விரண்டுந் தவத்திற்கு வடிவமாகு மென்பதாம்.

கிழமைப் படவாழ்.

உன்பொருள் பிறருக்கு உரிமைப்பட நீ வாழு.

8-ம்-அதி அன்புடைமை-2-ம்-செய்யுள்.

அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

அன்பில்லாதவ ரெல்லாப்பொருளையுந் தமக்கென வைத்த னுபவிப்பரென்று மன்புடையவர் தம் மெலும்பைக் கேட்பினும், பிறருக்கு உதவுவரென்றுஞ் சொல்லியதாம்.

கீழ்மை யகற்று.

இழிவுகளை நீக்கு.

18-ம்-அதி- கயமை-1-ம்-செய்யுள்.

மக்களே போல்வர் கயவர வரன்ன
வொப்பாரி யாங்கண்ட தில்.

மனிதர் சாதிக்குங் கீழோர்சாதிக்கு முருவ முழுதுமொத்த லாற் குணங்களாலல்லது அவ்விருசாதிக்குமுள்ள வேற்றுமை யறியப்படா தென்பதாம்.

குணமது கைவிடேல்.

குணமுள்ளதாகிய ஒன்றை, விட்டு விடாதே.

606-ம்-அதி-வினைத்திட்பம்-9-ம்-செய்யுள்.

துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை.

துவக்கத்திலே முயற்சியாற் றுன்பம்வரினு மதற்குத் தளராமன் முடிவிற் சுகத்தைத்தருந் தொழிலை மனவலிமையாற் செய்க வென்பதாம்.

கூடிப் பிரியேல்.

(நல்லாரோடு) சிநேகித்து, பின்பு அவரைவிட்டு நீங்காதே.

801-அதி-பழமை-7-ம்-செய்யுள்.

அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

நட்பினர் தமக்குக் கேடுசெய்தாலு மன்பையும் பழையதாகிய நட்பையு முடையவ ரவர்மே லன்பு நீங்கா ரென்பதாம்.

கேடேண்ண நினையேல்.

பிறருக்குக் கேடு செய்வதை, எக்காலத்திலும் விட்டிரு.

201-ம்-அதி-தீவினையச்சம்-4-ம்-செய்யுள்

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

ஒருவன் பிறனுக்குக் கேடு செய்தற் கெண்ணுவானாயி னப்பொழுதே யவனைக் கெடச்செய்து, தருமம் நீங்கு மாதலாலே தீவினையை யெண்ணலுமாகா தென்பதாம்.

கேள்விமுயல்.

பெரியோர் சொல்லைக் கேட்பதற்கு முயற்சிசெய்.

402-ம்-அதி. கேள்வி-4-ம-செய்யுள்.

கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை.

ஒருவற்குக் கல்வி யில்லையாயினுங் கேள்வி மாத்திர முண்டேல் அதுவே தளர்ச்சி வந்தவிடத் ததை நீக்குமென்பதாம்.

(இன்னும் வரும்)

பிறப்பின்பிரஹடநம்.

இடம்.

கோலார் தங்கவயல் சாம்பியன்ரீப்ஸ்

தந்தை

ஷை யூர் நிவாசரும், அர்ச்: அன்னம்மாள் வெறிவிலக்குச்சங்காதிபருமாகும், ஸ்ரீமக்: பிரான்சிஸ் சி. தம்புசாமிபிள்ளையவர்கள்.

தந்தாள்.

ஷை பிள்ளையவர்களின் அரிய கற்பின் கிழத்தியாகிய பதி-ஸ்ரீமதி சிந்தாத்திரியம்மாள்.

குழந்தை விபரம்.

ஷையாரின் அரிய இல்லறத்தில் நடக்கும் 10-வது குழந்தையாம் அந்தோணியம்மாளென்னும் பெயருடையாள்.

குறிப்பு.

1909ஹு ஜூன்மீ 30உ புதன்கிழமை இரவு 11மணி.

வேண்டுவதென்ன.

ஷை சற்குண தம்புசாமிபிள்ளையவர்கள் தமது புத்திரகளத்திருடன், இச்சேயும் சுகமே நீடு திருவருளை யன்பர்கள் துதித்தலே.

சோதரப்பிரியன்.

இதுவுமதுவே.

பெங்களூர் மார்டன் பிரதர்ஸ் மானியூ பாக்ட்சரர் பிரன்ச் அண்ட் இங்கிலீஷ் கண்பெக்ஷனர் ஷாப்பு ஸ்ரீமக்: ம. மதுரைப்பிள்ளையவர்கள் மனைவிக்கு நாலாவது பெண்மகள், 1909-ஹு ஜூலை-மீ 7உ புதவாரம் காலை, 9-மணிக்கு ஜனனம். தாயும் சேயும் ஜனனசிகிச்சா சாலையில் சுகம். இப்பேற்றினுக்கு ஆதரவாயிருந்த அருட்பெருஞ் சோதியை அநுதினனம் துதிப்போமாக.

மேற்படி ம. மதுரைப்பிள்ளையுவர்கள்

அத்தியந்த பிரியன்

வே. து. சேர்வை முருகேஸன்.

சென்னை நுங்கம்பாக்கம் கோடம்பாக்கம் சாலை 7வது எண்ணுள்ள கிருஹ நிவாசியாகிய எனது தந்தையார் வீ. ஆறுமுகம் பிள்ளையவர்கள் 1909ளு ஏப்ரல்மீ 12உ திங்கட்கிழமைபகல் 1-30 மணிக்குத் தேகவியோகமான,

அறிகுறிவெண்பா.

கீலகமார் பங்குனியிற் கேடிகதி முப்பஃதிற்
சாலவுயர் நாடிங்கள் சப்தமியா—மாலமரும்
அண்ணற் சிவநிழலை ஆறு முகம்பிள்ளை
நண்ணி புவிநீத்த நாள்.

விருத்தம்.

பாராண்டு கீலகமே கீலகத்தைக் கிளர்த்தியபு பங்கு நீயோ
சீராண்டு பங்குநீயே யென்றிடநாள் சப்தமியே சப்த நீக்க
வாராண்டு கொண்டதிரு லாப்தமதி இகதியது மந்த மாக
சாராண்டு வீ. ஆறு முகம்பிள்ளை கடனீத்த சதிராங் கொல்லோ!

வீ. ஆ. ஷண்முகம்பிள்ளை.

ஓர் மகாஜன சபையின் இழிதொழிலாளர்க்கு இடி, என மகுட மிட்டு, சுதேசக் கிறிஸ்தவன் எனக் கையொப்பமிட்டார்கடிதம் தற்சமயம் போடப்படமாட்டாது. யாரைப் பறையனென்பது:—இக்கேள்வி கேட்ட அன்பர் அறியவேண்டியவிஷயங்கள் யாவும் தன்மபோதமாக வெளிவந்துலாவும் "தமிழன்" என்னும் பத்திரிகை வாயிலாக வுணரவும், அற்றேல் அப்பத்திராசிரியர் சங்கைக்குரிய க. அயோத்திதாஸப் பண்டிதரவர்பாற் சென்று பணிந்து கேட்கவும்.

பத்—ர்.

தகப்பன் சொல் தவறுமை.

"தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" என்னும் மூதாட்டியார் மொழிப்படி. ஒரு வியாபாரி தன் மெத்தை வீட்டிலே மேல் அடுக்கில் உட்கார்ந்து தன் வியாபார சம்பந்தமாய் பற்பல கடிதங்கள் வெகு அவசரமாக எழுதிக்கொண்டிருந்தான். அப்போது ஐந்துவயதுள்ள அவன் பிள்ளையும் பக்கத்தில் பந்து, பலகறை, பொம்மை, கிலுகிலுப்பை முதலானவைகளை வைத்துக்

கொண்டு விளையாடிக்கொண் டிருந்தது. அந்தச்சமயத்தில், யாரோ ஒருவர் கீழே வாயிற்படி யண்டை வந்து தங்களைப் பார்க்கவேண்டுமென்று கதவைத் தட்டுகிறார் என வேலைக்காரி மெத்தைமேலேறி வந்து சொல்ல, அந்த வர்த்தகன் தான் எழுதிக்கொண்டிருந்ததைத் தக்ஷணம் விட்டெழுந்து, அருகில் விளையாடிக்கொண்டிருந்த பிள்ளையைப்பார்த்து "அப்பா குழந்தாய்! நான் கீழேபோய் வருகிறவரையில் இந்தக் காகிதங்தங்களைக் காற்றடித்துக் கொண்டு போகாமலிருக்க நீ என்னுடைய நாற்காலியில் உட்கார்ந்து இந்தக்காகிதங்களின் மீது உன் கையை வைத்துக்கொண்டிரு" என்று சொல்ல, அச்சிறுவன், நானும் வருகிறேனென்று அழுதுகொண்டு பின்னே ஓடாமல், தன்சிறிய கையும் தன் பிரியமான தகப்பனுக்கு ஏதோ சிறிது சகாயஞ் செய்ய வல்லதா யிருக்கிறதே யென்று சந்தோஷமாய் எழுந்துவந்து காகிதத்தின்மேல் கையைவைக்கவே, தகப்பன் கீழே இறங்கிப் போய்விட்டான். தன்னைத்தேடி வந்தவனுடன் சற்று நேரம் பேசினபிறகு, அவன் ஏதோ காரிய அவசரத்தால் கூடவரும்படி அழைக்க, தகப்பன் அவனுடன் வெளியேபோய்விட்டான்.

அரைமணிநேரம் வரையில் அந்தக்குழந்தை காகிதத்தின் மீது கையை வைத்தபடியே யிருந்ததால் அதற்கு வெறுப்புண்டாகி, "இன்னும் தகப்பன் வரவில்லையே! எனக்கா கை ஓய்ந்து போகிறதே" என்று நினைத்துக்கொண்டு சற்று பராக்கா யிருப்போமென்று அவ்விடத்தில் சுற்றிலும் கட்டியிருக்கும் படங்களை ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டும், தரையில் பரப்பி யிருக்கும் இரத்தின கம்பளத்தில் பற்பல வர்ணமுள்ள புள்ளிகள் உத்தனையென்று எண்ணிக்கொண்டும், வருத்தந் தோன்றாமல், இட்கார்ந்திருந்தது. ஒருமணிநேரம் ஆகியும் தகப்பன் வரவில்லை. கடிதத்தையும் அதைக் காக்கும்படி வைத்துவந்த பிள்ளையையும் தகப்பன் தான் போனகாரியத்தில் மறந்தே போய் விட்டான். ஆயினும் அப்பிள்ளை, தந்தையிட்டுப்போன கட்டளையைத் தவறக்கூடாதென்று கைவலிப்பும் இடுப்பு வலிப்பும் அதிகமாயினும் அங்கேயே யிருந்து பொழுதும்போய் இருட்டு வருகிறதே! எங்கே போய்விட்டாரோ என எண்ணுவதெல்லாம் எண்ணிக் கொண்டு இருந்தது. பிள்ளைகளே! கேட்டீர்களா இந்தக் கதையை உட்கார்ந்த இடத்திலேயே ஒன்றரை மணிநேரம் அந்தச் சிறுகுழந்தை தந்தை சொல்லைத் தவறக்கூடாதென்று சலியாமல் காகிதத்தின் மீது கை வைத்தது வைத்தபடியே இருந்தது பார்த்தீர்களா.

இப்படியிருக்கையில் தகப்பன் திரும்பிவந்து தான் சொல்லிப் போனபடி தன் குழந்தை காகிதத்தின்மீது வைத்த கை வைத்தபடியே யிருப்பதைக்கண்டு ஆச்சரியப்பட்டு அன்புடன் பிள்ளையை எடுத்து அணைத்து, இது சொன்னபடி யிருந்ததே என்று பலதரம் முத்தமிட்டு முன்னிருந்ததைவிடப் பதின்மடங்கு அதிகமாக ஆதரித்து வந்தான். அந்தக்காகிதங்கள் காற்றிலடித்துப்போகாமலிருக்க எழுதும் மேஜையின் மீது ஈயக்கட்டி கனமாய் ஒன்றிருந்தது. அதைத் தகப்பன் வேலையவசரத்தால் போனபோது காகிதத்தின்மேல் வைத்துப்போயிருந்தால் அதுவும் காகிதத்தை யடித்துக்கொண்டு போகாமல் காப்பாற்றுமே. அந்த ஈயக்கட்டி கட்டளை மீறிநடக்கவாவது அசையவாவது சக்தியில்லாமல் வைத்தவிடத்திலேதானே விழுந்து கிடக்குமே. ஆனாலும் தகப்பன் திரும்பிவந்தபோது அப்படிக் கிடந்ததற்கு அந்த ஈயக்கட்டியை முத்தமிட்டிருப்பானா? மாட்டானே! இவ்விரண்டிற்கும் என்ன வித்தியாசமிருக்கிறது. சற்று யோசித்துப் பாருங்கள் அசையவும் எடுக்கவும் வைக்கவும் சக்தியுள்ள அந்தப்பிள்ளை, கைவலித்துச் சோர்வடைந்தபோது எழுந்து ஓடிப் போகாமல், மதித்து அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்ததே, இதுதான் அதிசயம். அசேதனமான ஈயக்கட்டிக்கு அசையும் சக்தியில்லை மீறி நடக்கவும் சக்தியில்லையாதலால் அது வைத்தவிடத்திலேயே யிருப்பது ஆச்சரியமல்லவே! ஆகையாலேதான் சிறுவன் கீழ்ப்படிந்து பிசகிப்போகாமலிருந்தது நன்கு மதிக்கத்தக்கதாயிற்று. இவ்வாறே சிருஷ்டிகர்த்தாவும் தான் படைத்தவைகளெல்லாம் தன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் மகிழ்ந்து ரக்ஷிப்பார். நம்பினவர்களை அவர் ஒருபோதும், கைவிடமாட்டார்.

அஷ்டாவதானியார்.

சமாசாரக் கொத்து.

நீர்க்குதிரை.

நீர்க்குதிரை யென்பது நீரில் வாசம் செய்கின்ற ஒரு பெரிய மிருகம். அது பார்வைக்கு ஒரு விகாரமான யானைபோலிருக்கும். அதன் உடல் யானையின் உடலவ்வளவு பெரிதென்றாலும், கால் மிகவும் குட்டையானது; அதற்குத் துதிக்கை கிடையாது. குண்டான உடலும், மிகப் பருத்த மண்டையும் சிறிய கண்களும் காதுகளும், குட்டையான வாலும், காலில் நான்கு விரல்களுமுள்ளது. இந்தப் பெரிய மிருகங்கள் ஆப்பிரிகா தேசத்து ஜீவ நதிகளிலும் மடுக்களிலும் அநேகமாயிருக்கின்றன. நீலநதி

முதலிய பெரிய நதிகளின் கரைகளில் இந்த விகார மிருகங்களை விசேஷமாய்க் காணலாம். நீர்ப்பூண்டுகளையே அவை தின்று ஜீவிக்கின்றன. காடுகளிலும் புலங்களிலும் போய் மேய்வதற்கு அவை இராக்காலங்களில் அந்நதிகளை விட்டு வெளியே போவதுமுண்டு. அவைகளுக்குப் பெரிய தந்தங்களுண்டு. அந்தத் தந்தங்கள மிகவும் கெட்டியாய்ச் சிறந்தவை அவ்வுயர்ந்த தந்தங்களுக்காகவே வேடர்கள் கண்டவிடத்தில் அதைக் கொல்ல முயல்கிறார்கள். அவற்றை சங்கிலிகள்கட்டி இழுத்துப் பெரிய நதிகளிலிருந்து பிடிப்பதுமுண்டு. சில நீர்க்குதிரைகளைப் பிடித்து ஐரோப்பாவுக்குக் கொண்டுபோய் விநோத மிருகசாலையில் வைத்திருக்கிறார்கள். இவ்வதிசயமான மிருகத்தைப் பார்க்கப் பதினாயிரக்கணக்காய்ப் பிரஜைகள் பலவிடங்களிலுமிருந்து ஓடிவருகிறார்கள் நமது சென்னைச் சிங்காரத்தோட்டத்தில் பல புதுமையான மிருகங்கள் இருந்தாலும நீர்க்குதிரை இல்லை சீக்கிரமே இந்தவிநோத மிருகமும் ஒன்று இவ்விடத்துக்குப் பிடித்து வருவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

பர்மாவைச் சார்ந்த மாண்டலேயிலுள்ள சிறைச்சாலையில் விஷபேதி புகுந்து 15-பேரை அந்தவியாதி தாக்கினதாம். இவ்விடத்திலுள்ளவர்கள் சிறைக்கூடத்திலிருக்கும் பாலகங்காதர திலேக் என்பவருக்கு அந்தவியாதி எங்கேதாக்கப் போகிறதென்று சந்தேகம் அவரை மாண்டலேயிலிருந்து மெக்டிலா சிறைச் சாலைக்கு அனுப்பிவிடுகிறதாச வதந்தி கனம் திலகரை விட்டு விடுகிறபோது அவர் சுதேசியத்தைப்பற்றி பேசாமலும் எழுதாமலும் இருப்பார் என்பது மற்றவர்களுடைய கோரிக்கை.

வங்காள நாகப்பூரிலிருந்து பாச்ஞம் ஸ்டேஷனுக்கு போகக் கொண்டிருந்த மதிராஸ் மேய்ல் வண்டி தொடரில் திடீரென்று பாம்ப் (Bomb) வெடிச்சத்தம் கேட்கவும் வண்டியை நிறுத்தி பார்க்கவும அது துப்பாக்கியின் சததமாயிருந்தது. குண்டு பிரேக் வான் பக்கமாய் பாய்ந்ததில் அங்கிருந்த ஐரோப்பிய கார்ட் ஜெ. சி. டேவிஸ் அவர்கள் தெய்வாதீனமாய் தப்பித்தனர். 2-வது வகுப்பில் அமோகமான ஐரோப்பிய பிரயாணிகளிருந்ததினால் அவர்களை கொல்லவேண்டியே இந்த துப்பாக்கி பிரயோகம் செய்ததாகவே போலீஸார் சந்தேகிக்கின்றனர். அந்நேரம் இருட்டாயிருந்ததினால் துப்பாக்கி சுட்டவர்கள் தப்பித்துப்போய்விட்டார்கள்.

கிரேக்தேசத்திலுள்ள ஒரு மாகாணத்தில் பூகம்பம்உண்டாகிஅநேக உயிர்களுக்குச்சேதமும் பொருள் நஷ்டமுமு உண்டாயிற்று. ஹார்வாரிமன்னும் கிராமத்தில் 30 மனுஷர்கள் இறந்தும் 400 கிராமங்கள் அழிந்தும் போயின வேறு 12 கிராமங்களும் அதிகமாய் நஷ்டமடைந்தன.

உ

வேலு மயிலுந் துணை

பெரியலாபம்! மொத்தவிற்பனை!!

பிள்ளையார் சதுர்த்தி

பெரிய வேழமுகம்.

என்னும் விநாயகசதுர்த்தி வழக்கமான புத்தகம் அரிய பூஜாவிதிகளும் ஔவையார் முதலியோர் பாடிய, அகவல்களும் நமது "பூலோகவியாஸன்" பத்திராதிபரவர்களால் திரட்டி சேர்த்து பெரியவேழமுகமெனப் பெயரிட்டு நல்லபதிப்பாக விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. வெளியூர் அன்பர்கள் மொத்தமாக வேண்டும்பட்சத்தில் நூறுபுத்தகம் 8—அணாவாக வாங்கிக்கொள்ளலாம். வி. பி. சார்ஜி பிரத்தியேகம். ஒரு புத்தகத்தின், விலை, பை. 3. ஸ்டாம்புசெலவு பிரத்தியேகம்.

விலாசம்.

T. S. குட்டியப்ப முதலியார்.

பூலோகவியாஸன் பிரஸ், சென்ஜாவியர் தெருவு,

ஜார்ஜ்டவுண், சென்னை.

காப்பிகள் கோருங்கள் சீக்கிரம் பெற்றுக்கொள்ளவும்.

இரங்கூன்:— ஜூலை-மீ 12உ புதன்கிழமை இரங்கூன் ஜனரல் போஸ்டாபீஸிலுள்ள சேவகர்கள் சுமார் 40—பேர்கள் வேலையினின்று நின்றுவிட்டார்கள். மற்றசேவகர்களைக்கொண்டு வேலை நடத்தினார்கள். வேலை செய்பவர்களை நின்றுவிட்டவர்கள் தடுக்காதபடி போலீஸாருக்கு அறிக்கையிடப்பட்டது.

நூலரங்கேற்றம்:— இரங்கோன் நியாய விசாரணைச்சாலையின் பிரதம கௌரவ நியாயதிபதியும், முனிஸிபல் கமிஷனரும் ஆனரெறி மாஜிஸ்ட்ரேய்ட்டும் கருணைவள்ளலுமாகின்ற ரேய்பஹதூர் ஸ்ரீயுத பெ. மா மதுரைப்பிள்ளையவர்கள் ஹைஸ்கூல் ஹாலில் 1909-ளு ஜூலை-மீ 11உ ஞாயிற்றுக்கிழமைப் பிற்பகல் 2-மணிக்கு, இரங்கூன் இரஞ்சிதபோதினி பத்திராசிரியர்

ஸ்ரீயுத S. சாமிவேல் B. A. அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் வித்வசிரோமணிகளின் விஜயங்களில் நிகழ்ந்தவைகளைத் திரட்டிய நூல்கள் அரங்கேற்றமாயின. ஏற்கனவே வெளியிட்டிருந்த விஷயசூசிகையின்படி அநேக வித்துவான்கள் பிரசங்கித்தார்கள். நமது இரங்கூன் விஜயத்திரட்டை அரங்கேற்றுங் காலத்தில் நமது அவதான நற்சாட்சியை மகா மதுரகவிப் புலவர் ஸ்ரீமந்: ஆ. ந. கபாலமூர்த்திப்பிள்ளை யவர்கள் வித்தாரமாய்ப் பேசினார். நமது தரிசனப்பத்து என்னும் பாசுரங்களை அமுதகவி, ஸ்ரீமந்: சி. வீ. முருகேசம்பிள்ளை யவர்கள் அரங்கேற்றினர். சபாப்ரசங்க ரத்னாகர ஸ்ரீமந்: பி. வீ. இராமதாஸப்புலவரவர்கள் நமது விஜயத்திரட்டை வாசித்து அரங்கேற்றினர்.

ஸ்ரீமந் மகாமதுரகவிப் புலவரவர்கள் சென்னை விஜயச் சிறப்பு விளக்கம் என்னும் நூலை முத்தமிழ்க்கவிச்சிங்கம் மேற்படி பி. வீ. இராமதாஸப்புலவரவர்கள் வாசித்தனர். அதிலடங்கிய நமது திருப்பதிகத்தையும், நான்மௌக்திக மதாணியென்னும் நூலையும் அவரே அரங்கேற்றினர். மேற்படி திருப்பதிகத்தின் நற்சாட்சிகளை மேற்படி மகா மதுரகவிப்புலவரவர்கள் வாசித்தனர். பாலகவி அமுதமொழிப்புலவர் வீ. ஏ. சிங்காரவேலுப்பிள்ளையவர்கள் மேற்படி சிறப்புவிளக்கத்திலடங்கிய மகாமதுரகவிப்புலவரது பலவண்ணப்பஞ்சகத்தையும், வாழ்த்துக் கவிகளையும் அரங்கேற்றினதோடு அன்பென்னும் விஷயமாகவும் பேசி முடித்தார். அச்சமயம் வேப்பேரி T. R. பார்த்தசாரதி பிள்ளையவர்களால் இங்கிலீஷ் அட்ரஸ் வாசிக்கப்பட்டது. செந்தமிழ்ப் பாநு பா. முனிசாமிபிள்ளையவர்கள் தாமியற்றிய உயிர்வருக்க மாலை என்னும் பிரபந்தத்தை யரங்கேற்றினர். அமுதகவி சி. வீ. முருகேசம்பிள்ளையவர்கள் பலவண்ணப் பஞ்சகத்தின் நற்சாட்சிகளை வாசித்தார். பொ. ஐ. அப்பாதுரை மூர்த்தியவர்களால் முடிவுரை வாசிக்கப்பட்டது.

மெடில் பரிசுகள்:—மேற்படி பி. வீ. இராமதாஸப்புலவரவர்களுக்கும், செந்தமிழ்பாநு பா. முனிஸ்வாமி பிள்ளையவர்களுக்கும் மேற்படி மகா மதுரகவிப்புலவரவர்களால் மேற்படி புலமைப்பட்டங்கள் வரையப்பெற்ற பொன் பதக்கங்கள் பரிசாக வளிக்கப்பட்டன. தசாவதானம் பூஞ்சோலை முத்துவீர நாவலரவர்கள் தமது திரு மாணவர்களுக்கும் மகாமதுரகவிப் புலவரவர்களுக்கும் வாழ்த்துதலாகப்பாடி யனுப்பிய அச்சுத்தாள்களை யாவருக்கும் கொடுத்துப புரசை ஸ்ரீ. வீ. ஏ. சிங்காரவேலுபிள்ளையவர்கள் அரங்கேற்றஞ்செய்தார். ஜனத்திரளளவிடக் கூடாத வெகுகூட்டம் சுமார் மாலை 6-30 மணிக்குச் சர்வ மங்கள கரமாகவும் ஆனந்தமாகவும் முடிவு கொண்டது.